2. தகவல் கோரல்

(அ) முன் அனுமதியின்றி எழுப்பப்பெறும் பிரச்சினைகள்

திரு. என் எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட்டு ஆப் ஆர்டர் சார். மிக முக்கியமான சட்டம் ஒழுங்கு பிரச்சினையிலே தங்களுடைய கவனத்தை ஈர்க்கவும் இந்த அரசினுடைய விளக்கத்தை பெறவும் நான் இங்கே எழுந்துள்ளேன் தமிழகத்திலே மாணவர்களுக்கும் பஸ் தொழிலாளர்களுக்கும் அவ்வப்போது மோதல் ஏற்பட்டு வருகிறது. இதனை ஒட்டி 1981-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 6-ஆம் நாள் அன்று மாணவர்களுக்கும் பேருந்து பணியாளர் களுக்கும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்; எனக்கு நோட்டீஸ் கொடுங் கள். ஒத்திவைப்புத் தீர்மானமாக கொடுங்கள் கவன ஈர்ப்பு கொடுங்கள் பாயிண்ட் ஆப் ஆர்டரில் இது எப்படி வரும்? திடீர் என்று பாயிண்ட் ஆப் ஆர்டர் என்றால் எப்படி?

திரு. என். எஸ் வி. சித்தன்; பேரவைத் தலைவர் அவர்களே இந்தத் தீர்ப்பு வந்ததற்கு பின்னாலே அரசு ஆணை பிறப் பித்ததற்கு பின்னாலே இப்போது 3 மாணவர்கள் இறந்து இருக்கிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்; அது சரி. 3 பேர் இறந்து இருக்கிறார்கள் இல்லையா. கொண்டுவரும் முறைப்படி கொண்டு வாருங்கள். நீங்கள் உணரும் போது முக்கியத் துவத்தை நானும் உணருகிறேன். முறைப்படி கொண்டுவந்தால் எடுத்துக் கொள்வதற்கு முயற்சிப்பேன்.

திரு ஆர். மணிமாறன்; பாயிண்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்களே இந்த அவையிலே பணியாற்றிக்கொண டிருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டவர். அவருடைய இல்லத்திலிருந்து ஒரு 200 அடி தூர த்தில் ஒரு வெடி குண்டு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்; அது இன்றைய தினத்தந்தி பேப்பரிலே வந்திருக்கிறது. அது இங்கே பேசிய பிறகு பத் திரிக்கையிலே வந்திருந்தால் நன்றாக இருக்கும். பத்திரிக்கை யிலே வந்தபிறகு திரும்பி பேசினால் அது பழைய செய்தி யாகிவிடுகிறது.